# முத்தமிழறிஞர் கலைஞர் 8வது நினைவு நாள் - சிலைக்கு மலரஞ்சலி!

## ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி அறிக்கை!



ஈரோடு, ஆக. 7 - தகைமைசால் தலைவராகவும், எழுத்தாளராகவும், கவிஞராகவும், சொற்பொழிவாளராகவும், திரைக்கதை வசன கர்த்தாவகவும், இலக்கியவாதியாகவும், திரைப்பட தயாரிப்பாளராகவும், தலைசிறந்த நிர்வாகியாகவும், ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாள்களில் ஒருவராக தனது பொது வாழ்வை தொடங்கி, பின்னர் காஞ்சி தந்த காவியத்தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்ற கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா மறைவுக்கு பிறகு திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவராக ஏறதாழ 50 ஆண்டு காலம் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்து தமிழக வரலாற்றில் தமக்கென்று பல பக்கங்களை ஒதுங்கி கொண்ட முத்தமிழறிஞர், தமிழின தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவுநாளையொட்டி 7.8.2026 வெள்ளிக்கிழமை அன்று கீழ் கண்ட இடங்களில் திருவுருவ சிலை மற்றும் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தபட உள்ளது.

காலை 8.30 மணிக்கு பெரியார் நகர் மாவட்ட முகாம் அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல், காலை 8.45 மணிக்கு கலைஞர் அறிவாலயம், தளபதி மன்றம், மணல்மேடு அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 9.00 மணிக்கு முனிசிபல் காலனியில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 9.15 மணிக்கு பன்னீர்செல்வம் பூங்காவில்உள்ளமுத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 10.00 மணிக்கு பெருந்துறை அண்ணா சிலை அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 10.20 மணிக்கு காஞ்சிகோயில் நால் ரோட்டில்முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 10.40 மணிக்கு திங்களூர் நால்ரோடு ரவுண்டானா அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 11.00 மணிக்கு குன்னத்தூர் பேருந்து நிறுத்தம் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 11.20 மணிக்கு பவர்ஹவுஸ் (தாளபதி) மத்திய ஒன்றிய அலுவலகம் முன்பு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 11.40 மணிக்கு செங்கம்பள்ளி மேம்பாலம் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 12.00 மணிக்கு விஜயமங்கலம் பேருந்து நிறுத்தம் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 12.20 மணிக்கு வாய்ப்பாடி பேருந்து நிறுத்தம் அருகில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

காலை 12.45 மணிக்கு மொடக்குறிச்சி உதயம் அன்பகத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துதல்,

எனவே மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள், தணை அமைப்புகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டுறவு சங்க முன்னாள் பிரதிநிதிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறேன்.

**குறிப்பு**: ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, பகுதி, ஒன்றிய, பேரூர், வார்டு, ஊர்க்கிளை கழக நிர்வாகிகள் அனைவரும் அந்தந்த இடத்தில் ஏற்கனவே கொடுக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படத்தை வைத்து மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பொய்யான குற்றச்சாட்டு சுமத்தி கைது செய்த த.வெ.க. அரசைக் கண்டித்து, உடனே விடுதலை செய்ய வலியுறுத்தியும், கும்பகோணத்தில் தி.மு.க. சார்பில் சாலை மறியல் நடைபெற்றது. இதில் கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.கே.முத்துச்செல்வன், ஜெ.சுதாகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் 250க்கு மேற்பட்ட நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர்.

### இன்று (ஆகஸ்டு 7) - தலைவர் கலைஞர் 8-ம் ஆண்டு நினைவு நாளில்

# கோவை தெற்கு மாவட்டத்தில் அனைவரும் புகழஞ்சலி செலுத்துவோம்!

## மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் வேண்டுகோள்!



கோவை, ஆக. 7 - ஆகஸ்டு 7 தலைவர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளில் கோவை தெற்கு மாவட்டத்தில் அனைவரும் புகழஞ்சலி செலுத்துவோம் என்று மாவட்டக் கழகச் செயலாளர் தளபதி முருகேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :

உலக தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், இந்திய அரசியலில் மூத்த தலைவராக இருந்து பல்வேறு சூழ்நிலைகளில் பல குடியரசு தலைவர்கள் மற்றும் பிரதமர்களையும் உருவாக்கி, இந்திய அரசியலில் சமூக நீதியை காப்பதில் முதன்மையாக திகழ்ந்து ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை பாதுகாத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

திராவிட இயக்கத்தின் மூத்த தலைவராக திகழ்ந்து, இந்திய அளவில் அனைத்து மாநிலங்களிலும், முதன்மை மாநிலமாக தமிழகத்தை 2021-2026 வரை முதல்வராக இருந்து திகழவைத்த தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களை நமக்கு தந்தவர்.

5 முறை தமிழகத்தின் முதல்வராக இருந்தோடு, தொடர்ந்து இந்திய அரசியல் வரலாற்றில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றிக்கண்டு, தமிழகம் அனைத்து துறைகளிலும் இன்றும் சிறப்பு பெற்றிட அடித்தளமாக திகழ்ந்து, நவீன தமிழகத்தின் தந்தை என அனைவராலும் போற்றப்பட்டவர் தலைவர் கலைஞர் அவர்கள்.

திராவிட முன்னேற்ற கழகம் எனும் பேரியக்கத்தை கண்ட பேறறிஞர் அண்ணா வழியில் அயராது உழைத்து கழகத்தையும், கழக கொள்கைகளையும் கடைசி நொடி வரையிலும் பாதுகாத்து, தமிழ் மொழிக்காக, தமிழினத்திற்காக உழைத்த நம் நெஞ்சத்தை விட்டு அகலாத தலைவர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளில் புகழஞ்சலியை செலுத்திடுவோம்.

கழக தலைவர் தளபதி அவர்களின் வழிகாட்டுதல்படி, கோவை மாவட்டத்தில் முதன் முதலாக அமைந்த கோவை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட சூலூர் சட்டமன்றத் தொகுதி கணியூரில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவ சிலைக்கு காலை 8 மணிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.

தொடர்ந்து கோவை தெற்கு மாவட்டத்திற்குட்ட நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள மாநகராட்சி வார்டுகள் 8, நகராட்சி வார்டுகள் 111, பேரூராட்சி வார்டுகள் 270,705 ஒன்றிய ஊராட்சி கிளைக் கழகங்கள் என 1000க்கும் மேற்பட்ட அனைத்து இடங்களிலும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு அவரது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக

# முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளையொட்டி அமைதி பேரணி!

## மாவட்டச் செயலாளர் – முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் அறிக்கை!



கிருஷ்ணகிரி, ஆக. 7- கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் அறிக்கை வருமாறு:-

தங்கச் சூரியன் வங்க கடலோரத்தில் துயில் கொண்டிருக்கும் எங்கள் அன்பு கலைஞரே, “என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே” எனும் காந்தக் குரலுக்கு சொந்தமான எங்கள் முத்தமிழ் அறிஞரே,

பெரியாரின் எண்ணங்களை அண்ணாவின் வழியில் நடைமுறை படுத்தி பல லட்சியங்களை சாதித்த பேரறிஞரின் தம்பியே, சட்டங்கள் பலஇயற்றி, திட்டங்கள் பலதீட்டி தமிழ் நாட்டை உலகறிய செய்த எங்கள் அன்பு இதயமே,

அய்யன் திருவள்ளுவருக்கு தேர்வைத்தால் போதாது என்று வானுயர சிலை வைத்து உலகத்தையே அண்ணார்ந்து பார்க்க வைத்த திருக்குறளுக்கு உரை எழுதிய தங்க பேனாவே உங்கள் நினைவு நாளில் வணங்குகின்றோம்.

இந்திய நாட்டிலேயே சிறந்த முதலமைச்சராக பணியாற்றிய கழகத் தலைவர் தளபதியார் அவர்கள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழக இளைஞர் அணி செயலாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இளம் தலைவர் ஆகியோரின் வழியில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள் அவர்கள் சார்ந்த பகுதிகளில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்த வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஆகஸ்ட் 7 ம் தேதி காலை 10.00 மணிக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்டச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் எனது தலைமையில் கிருஷ்ணகிரி, பெங்களூர் சாலை, சென்ட்ரல் தியேட்டர் அருகிலிருந்து அமைதி பேரணியாகச் சென்று ராயக்கோட்டை ரோடு மேம்பாலம் அருகே உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, அன்னதானம் வழங்கப்பட உள்ளது.


இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மூத்த முன்னோடிகள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர் உள்ளிட்ட நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், BLA 2, BDA வாக்குச்சாவடி முகவர்கள், வாக்குச்சாவடி ஒருங்கிணைப்பாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தே.மதியழகன் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நினைவு நாளில்

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் மாற்றுத்திறனாளிகள் வாகனப் பேரணி!

## கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை!



சென்னை, ஆக. 7 - முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைதிப் பேரணியில் கழக மாற்றுத்திறனாளிகள் அணியினரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தினரும் திரளாக பங்கேற்குமாறு அழைப்பு விடுத்து கழக மாற்றுத்திறனாளிகள் அணி மாநில தலைவர் ரெ.தங்கம் அறிக்கை விட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளையொட்டி, 7.8.2026 வெள்ளிக்கிழமை காலை 8 மணி அளவில் ஓமந்தூரார் அரசு பல்நோக்கு மருத்துவமனை கலைஞர் சிலையிலிருந்து கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் அமைதி பேரணியாக புறப்பட்டு மெரினாவில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் நினைவிடத்தை அடைந்து மலர் வளையம் வைத்து மரியாதை செய்து நினைவேந்தல் நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்த அமைதிப் பேரணியில் கழக மாநில,மாவட்ட, மற்றும் பகுதி, வட்டக் நிர்வாகிகளும், பல்வேறு அணிகளும், திரளான தொண்டர்களும் அமைதிப் பேரணிகள் பங்கேற்க உள்ள நிலையில், கழக மாற்றுத் திறனாளிகள் அணியின் சார்பாகவும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தின் சார்பாகவும் மற்றும் பல்வேறு மாற்றுத்திறனாளிகள் சங்கத்தினரும் தங்கள் இணைப்புச் சக்கர வண்டிகளில் கழகத் தலைவர் அவர்களுடைய தலைமையில் பேரணியாக சென்று மெரினா கடற்கரையில் அமைந்துள்ள கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்த உள்ளனர்.

இப்பேரணியில் கழக மாற்றுத் திறனாளிகள் அணியினரும், தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்கத்தினரும் மற்றும் பல்வேறு மாற்றுத் திறனாளிகள் சங்கத்தின் நிர்வாகிகளும் திரளாக பங்கேற்று கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்திட அமைதிப் பேரணியில் பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ரெ.தங்கம் தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எலமந்தா
### ஆகஸ்ட் 7 (1995)



**தி.மு.கழக ஆதிதிராவிட நலப் பிரிவு மாநில செயலாளராகவும், தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**


**எப்பொழுதும் ஓடியாடி ஏதாவது கழகப் பணி, பொதுப்பணி மற்றும் ஆதிஆந்திர மக்களுக்கான பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் நிகரற்று விளங்கியவர்.**

**“தொண்டனாக அலைந்தவர். தொழில் மேற்கொண்டு சிறந்தவர். என் விருப்பம் நிறைவேற்றிட எம்.எல்.சியாகப் பொறுப்பேற்று மேலவையில் கருத்து முழக்கம் செய்தவர். கழகத்தை உயிராக எண்ணியவர்!” என தலைவர் கலைஞர் அவர்களால் ‘வீரவேங்கையொன்று வீழ்ந்ததே!’ என இரங்கல் கடிதத்தில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஹைவேவிஸ் எம். மனோகரன்
### ஆகஸ்ட் 7 (2017)



**இளவயது முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றியவர்.**

**பத்து ஆண்டுகளுக்கு மேலாக தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் நிறைந்த மலைப் பிரதேசமான ஹைவேவிஸ் பேரூர்க் கழகச் செயலாளராகவும் – இருபத்தெட்டு ஆண்டுகள் ஒன்றுபட்ட மதுரை மாவட்ட தோட்டத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொதுச்செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**